# Capture THIS!

இலங்கை புகைப்படச் சங்கத்தால்((இ.பு.ச) நடத்தப்படும்
மாதாந்த போட்டி

Capture this! வருடாந்த விருதுகளை முன்னோக்கி, போட்டிமிகு சூழலில் புகைப்படத் திறனை அபிவிருத்தி செய்வதற்கும் தளம் அமைத்துக்கொடுப்பதற்கும் இலங்கை புகைப்படச் சங்கத்தால் (இ.பு.ச) நடாத்தப்படும் மாதாந்த புகைப்படப் போட்டியாகும்.

இந்த மாதாந்த போட்டியானது ஐந்து (5) பகுதிகளாக நடத்தப்படும்.

1. கருப்பொருள் ஒப்படை
2. திறந்த வர்ணம்
3. திறந்த ஒற்றை வர்ணம்
4. கானுயிர் மற்றும் இயற்கை
5. பயணம்

## கருப்பொருள் ஒப்படை

கருப்பொருள் ஒப்படைப் பகுதியில், அந்த மாதத்திற்காக வழங்கப்பட்ட கரு அல்லது தலைப்பில் ஒப்படைக்கு பொருந்தும் படங்களை சமர்ப்பிக்குமாறு பங்கெடுப்பவர்களைக் கோருகின்றது. போட்டிக்கென குறிப்பாகப் பிடிக்கப்படாத படங்களை தவிர்ப்பதற்கான கட்டுப்பாடுகள் தற்போது இல்லாத போதும் அவை தலைப்பிற்கு அல்லது கருவிற்கு பொருத்தமாக இருப்பதென்பதனால் சமர்ப்பித்துக்கொள்ளலாம்.

இந்த மாதாந்த தலைப்புகள் அல்லது கருக்களைப் பயன்படுத்தி, குறிப்பிட்ட போட்டிக்காகப் படங்களைப் பிடிப்பதனூடாக தமது திறனை மேம்படுத்துமாறு பங்கேற்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். நீங்கள், கருப்பொருள் ஒப்படைப் பகுதிக்காக வர்ண அல்லது ஒற்றை வர்ணப் படங்களை சமர்ப்பிக்க முடியும்.

மாதாந்த கருப்பொருள் ஒப்படை வகைக்கான தலைப்புகள் அல்லது கருக்கள் நேரத்திற்கு நேரம், மற்றும் முன்கூட்டியே அறிவிக்கப்படும். எதிர்பார்ப்புகள், பொருள்விளக்கம் மற்றும் வரையறைகள் தொடர்பான சுருக்கமான விளக்க குறிப்புரை ஒன்று வழங்கப்படும்.

## பருவகாலம் 2021

பருவகாலம் 2021 னுடைய மாதாந்த போட்டியானது ஜனவரி 2021ல் இருந்து டிசம்பர் 2021 வரை நடைபெறும்.

## யார் பங்கேற்கலாம்?

Capture this! பருவகாலம் 2021 ஆனது இலங்கையில் வசிக்கும் அல்லது கடல்கடந்து வாழும் அனைத்து இலங்கையர்களில் தொழில்சாரா மற்றும் தொழில்சார் படப்பிடிப்பாளர்கள் அனைவரும் பங்கேற்கலாம்.

## ஒரு குழுவாக போட்டியிடல்

தனிநபர் பரிசுகளுக்காக போட்டியிடும் போதும் பங்கேற்பாளர்கள் ஐந்து பேர் கொண்ட குழுவாகவும் போட்டியிட முடியும். தனிநபர் வெற்றியாளர்களுக்கு கூடுதலாக ஒவ்வொரு வகையில் இருந்தும் குழு வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர். குறைந்தது மூன்று குழுக்களாவது ஒரு வகைக்கு போட்டியிடுதல் அவசியம்

## நுழைவுக் கட்டணங்கள்:

வருடாந்த அங்கத்துவக் கட்டணம் நிலுவையில் இல்லாத இ.பு.ச அங்கத்தவர்கள் நுழைவுக்கட்டணமின்றி பங்கெடுக்க தகுதி பெற்றவர்கள். இந்த பருவகால போட்டிக்கு, அங்கத்தவரல்லாத 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான நுழைவுக் கட்டணம் ரூபாய். 2,000/- மற்றும் அங்கத்தவரல்லாத 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கான பங்கேற்றல் கட்டணம் ரூபாய் 1,000/- ஆகும். அங்கத்தவரல்லாதவர்கள் நுழைவுக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் போட்டிக்கான பதிவை மேற்கொள்ள வேண்டப்படுகின்றனர்.

## தீர்ப்பிடல்

அனைத்து ஐந்து பகுதிகளிலும் இருந்து வருகின்ற மாதாந்த பதிவுகள் இ.பு.ச நிறைவேற்று செயற்குழுவால் நியமிக்கப்பட்ட ஆயத்தினால் ஒரு முன்திட்டமிட்ட, நேரடியாக அல்லது இணையத்தின் ஊடாக திறந்த தீர்ப்பிடல் அமர்வு மூலமாக தீர்ப்பிடப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்படைப்புகளை (தற்போதைய நுழைவு விதிகள் மற்றும் வழிமுறைகளின் அடிப்படையில்) மற்றும் ஒவ்வொரு தலைப்பு/ கருவிற்கு அல்லது பகுதித் தேவைகள், தொழில்நுட்ப நிறைவேற்றுகை, புகைப்பட தாக்க விளைவு மற்றும் கலைத்திறன் வாய்ந்த வெளிப்படுதிறன் ஆகியவற்றிற்கு ஒப்படைப்புகளுடைய ஆற்றலின் மீதான இணக்கம் அல்லது பொருந்துமை ஆகியவற்றையும் ஆயம் மதிப்பீடு செய்யும்.

ஆயத்தினால் உறுதிப்படுத்தப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிவுகளுக்கு ஒவ்வொரு நடுவராலும் 1 முதல் 5 வரையான அளவீடுகளில் புள்ளிகள் வழங்கப்படும். ஒரு படத்திற்கு ஆயத்தினால் வழங்கக்கூடிய அதிகபட்ச புள்ளிகள் 15 ஆகும். ஒவ்வொரு புகுநரும் மாதாந்தம் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் வருடாந்த இ.பு.ச சர்வதேச கண்காட்சியில் வருடாந்த விருதுக்காக சேர்த்துக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு திறந்த தீர்ப்பிடலும் நடுவர்கள் குழாமிலிருந்து சுழற்சி முறையில் மூன்று நடுவர்களால் வழிநடத்தப்படும்.

## வெற்றியாளர்கள் இதன்மூலம் அடையப்போவதென்ன ?

- திறந்த தீர்ப்பிடலில் 15 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு படத்திற்கும் ரூபாய். 1000/- வழங்கப்படும்.
- ஒவ்வொரு பகுதியிலும் மூன்று அதிகூடிய புள்ளிகளைச் சேர்த்துக்கொண்ட பங்கேற்பாளர்கள், ஒவ்வொரு இயல் ஆண்டு இறுதியிலும் நடைபெறும் வருடாந்த நிகழ்வில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக்கொள்வர். இருந்தாலும் பங்கேற்பாளர்கள் பதக்கத்தைப் பெற்றுக்கொள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த பட்ச விழுக்காட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
  தங்கம் - பருவக்காலத்துக்கான மொத்தப் புள்ளிகளுடைய 75வீதம் அல்லது அதற்கு மேல்
  வெள்ளி- பருவக்காலத்துக்கான மொத்தப் புள்ளிகளுடைய 65-74வீதம் அல்லது அதற்கு மேல்
  வெண்கலம் - பருவக்காலத்துக்கான மொத்தப் புள்ளிகளுடைய 50-64வீதம் அல்லது அதற்கு மேல்
- ஒவ்வொரு வகையின் தங்கப்பதக்க வெற்றியாளர்கள் ரூபாய். 25,000/- ஐ பணப்பரிசாக வீட்டுக்கு எடுத்துச் செல்வர்.
- ஒவ்வொரு வகையின் வெற்றி அணியினருக்கு சான்றிதழ்களும் ஒரு வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும்.

போட்டிக்கு பதிவு செய்வதற்கான நுழைவு விதிகளும் வழிமுறைகளும் கீழே தரப்பட்டுள்ளன. புகுநர்கள் இவற்றைப் பின்பற்றுமாறு கோரப்படுகின்றார்கள்.

Capture THIS!

இலங்கை புகைப்படச் சங்கத்தால்((இ.பு.ச) நடத்தப்படும்
மாதாந்த போட்டி

**நுழைவு விதிகள்**
**மற்றும் வழிமுறைகள்**

1. பதிவுகள் புகைப்படங்களாக மாத்திரமே செய்யப்படவேண்டும் (ஒளி உணர்திறனூடான படப்பிடிப்பு) ஒன்றில் படச்சுருள் அல்லது புகைப்படக்குழம்பு அல்லது டிஜிட்டல் முறையில் பெறப்பட்டதாக இருக்கவேண்டும். படங்கள் டிஜிட்டல் மூலம் அல்லது ஆக்கியோரால் வேறு வழியில் திருத்தம் செய்யப்பட்டு மற்றும் மேலதிக உள்ளடக்கம் அதாவது மற்றைய படங்களின் பகுதிகள், கலைப்படைப்பு அல்லது கணினி உருவாக்கிய கிராபிக் போன்றவை இணைக்கப்படலாம் ஆனால் மூல படத்துக்கு பெரும்பான்மையான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும், கணினி முறையில் உருவாக்கப்பட்ட படங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. ஒரு பங்குபற்றுநர் ஒரு பகுதிக்கு ஒரு மாதத்திற்கு அதிகபட்சம் இரண்டு படங்களைச் சமர்ப்பிக்கலாம். (அல்லது அந்த எண்ணிக்கை நேரத்திற்கு நேரம் அறிவிக்கப்படலாம்). ஒரே படம் (அல்லது அதே போன்ற "புகைப்படக் கருவியில் உள்ள" அல்லது "பிரதியெடுத்த" படத்தின் நகல்) ஒரு பகுதிக்கு மேலதிகமாக சமர்ப்பிக்கக் கூடாது.

3. மாதாந்த போட்டி ஒன்றிற்காக முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட மற்றும் புள்ளிகள் வென்ற ஏதாவது படம் அல்லது படத்தின் ஒரு பகுதி அடுத்துவரும் மாத போட்டிகளில் மறுபடியும் எந்தவொரு பகுதியிலும் போட்டியிட அனுமதிக்கப்படாது. மாற்றங்கள் மற்றும் மாற்றியமைப்புகளுக்கும் இந்தக் கட்டுப்பாடு பொருந்தும் ஆனாலும் கத்தரித்தல், நோக்குநிலை மாற்றம் செய்தல், ஒருநிறப்படம் மற்றும் இணைவாக்க மாற்றம் செய்தல், அடுக்குகளிடல், மற்றைய படங்களுடன் மேற்பொருத்துதல் ஆகிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தாது.

4. ஒரு படம் அல்லது அதே படத்தினுடைய ஒரு பகுதியானது ஒரே மாதத்தில் சமர்ப்பிக்கப்படும் போது ஒரு படம் மட்டும் கருத்திற்கொள்ளப்படும்.

5. தெரிவு செய்யப்பட்டிருக்காத.'.புள்ளிகள் வழங்கப்பட்டிருக்காத படங்கள் மேலதிக மேம்பாடுகள் அல்லது மாற்றியமைப்புகளுடன் எதிர்காலத்தில் மாதாந்த போட்டிகளுக்கு சமர்ப்பிக்கலாம்.

6. இ.பு.ச கண்காட்சியில் பார்வைக்காக அல்லது ஏதாவது சான்றிதழ்கள் விருதுகளுக்கு தெரிவு செய்யப்பட்ட படம் அல்லது அதன் பகுதி ஏற்றுக்கொள்ளப்படாது. Capture this! இதேபோல இ.பு.ச வின் போட்டிக்கு பதிவுகளை சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதிக்கு முன்னதாக உள்நாட்டு அல்லது சர்வதேச கண்காட்சிகளில் பார்வைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட படங்கள் இ.பு.ச வின் மாதாந்த போட்டிகளுக்கு சமர்ப்பிக்கப்பட முடியாது.

7. மாதாந்த போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் ஒரு படம் அதனுடைய ஏற்றுக்கொள்கை புள்ளிகள் வழங்குவதற்காக தெரிவுசெய்கை ஆகியவற்றைக் கருத்திலெடுக்காமல் அவ்வாறான படம் மேற்குறிப்பிட்டபடி மாதாந்த போட்டிகளைத் தவிர இ.பு.ச கண்காட்சி அல்லது போட்டிகளில் பதிவுசெய்யப்படுவதிலிருந்து தகுதியிழக்காது.

8. தலைப்பு அல்லது பதிப்புரிமை தகவல் அல்லது ஆக்கியோரது அடையாளம் எந்த வடிவத்திலும் படத்தின் முகப்பிலிடுதல் அனுமதிக்கப்படாது. அவ்வாறான தகவல்கள் உள்ளடக்கமானது பதிவுகளை தானாகவே தகுதியிழக்கச் செய்யும்.

9. படத்திற்கான அளவு தரம்/ உறுதிப்பாடு மற்றும் ஏனைய ஏதாவது பொருத்தமான விவரக்குறிப்பு மற்றும் சமர்ப்பிப்பதற்கான முறை குறிப்பிடப்பட்டு இ.பு.ச-வினால் நேரத்திற்கு நேரம் பங்குபெறுபவர்களுக்கு அறிவிக்கப்படும். சமர்ப்பிக்கப்பட்ட படங்கள், அந்த வரன்முறைகளிற்கு ஏற்ப இயைபுள்ள அல்லது தற்போதைய காலத்திற்குரிய அந்த மாதாந்த போட்டிகளுக்கு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

10. பண்புறுதியுடன் சமர்ப்பிக்கப்படும் ஒரு பதிவு, இ.பு.ச-ன் மாதாந்த போட்டிக்கான பதிவுகளுக்கான சமர்ப்பிப்பின் போது புகுநர் அந்த வேலை தன்னுடைய சொந்த மற்றும் நடப்பு விதிகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக பொதுவாக உடன்பாடுவதாக சான்றுபகிர்கிறார். புகுநர் மேலும் ஏதாவது நிலையில் மூன்றாம் தரப்பினரால் பதிப்புரிமை மீறல்/ உரிமை கோரல் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார் என்பதையும் மற்றும் ஏதாவது பதிப்புரிமையின் தவறான பயன்பாடு அல்லது தனிப்பட்ட உரிமைகோரலுக்கு இ.பு.ச பொறுப்பாகாது எனக் கருதுகிறது.

11. புகுநரால் சமர்ப்பிக்கப்படும் ஒரு பதிவு முழுமையாக அல்லது பகுதியாக மாதாந்த போட்டியை விளம்பரம் செய்வதற்காக இலவசமாக உருவாக்கப்படும் பொருட்களில் பார்வைக்காகவும் அல்லது பதிப்புச்செய்யவும் அல்லது இ.பு.ச அதனது பொதுவான செயற்பாடுகளை விளம்பரம் செய்வதற்கும், இ.பு.ச அல்லது அதன் ஆதரவாளர்கள் அவற்றை பிரதியுருவாக்கம் செய்ய அனுமதிக்கிறது. அவ்வாறான பதிப்புகள் மாதாந்த டிஜிட்டல் அல்லது அச்சிட்ட காட்சிப்படுத்தல், செய்திமடல், இ.பு.ச இணையத்தளம், சந்தை ஊக்குவிப்பு பொருட்கள் அல்லது பட்டியல்கள் என்பன ஆகும்.

12. இ.பு.ச சமர்ப்பிக்கப்பட்ட பதிவுகளை மீளாய்வு செய்வதற்கு இதனுடைய உறுப்பினர்கள் அல்லது வெளியிலிருந்து பொருத்தமான, தெரிவுசெய்யப்பட்ட நடுவர்களடங்கிய ஆயங்களை நியமனம் செய்யும். தீர்ப்பிடலானது நடுவர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக நடைபெறும், மேலும் அவர்கள் பதிவுகளுக்கான நிபந்தனைகளின் படி மதிப்பீடு செய்வார்கள்.

13. முடிவுகளின் படி தீர்மானிப்பர் மற்றும் புள்ளிகளை வழங்காதிருக்க.'. ஏதாவது பகுதியில் அல்லது நிலையில் வெற்றியாளர்களைத் தெரிவு செய்யாதிருக்க அவர்களுடைய கருத்தின் படி சமர்ப்பிப்புகளின் மீதான எதிர்பார்ப்புகளில் குறைபாடுகள் உள்ளதெனின் தனித்த முடிவுகளின்படி தீர்மானிக்க முடியும்.

14. படங்களை தீர்ப்பிடுவது தொடர்பில் நடுவர்கள் ஆயத்தினால் எடுக்கப்பட்ட முடிவுகள் இறுதி முடிவாகக் கொள்ளப்படும்.

15. தீர்ப்பிடும் போது நடுவர்கள் ஆயங்கள் அல்லது இ.பு.ச நிறைவேற்றுக் குழு அல்லது நியமிக்கப்பட்ட அலுவலர்களால் விதிகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்காது அல்லது இசைந்துகொடுக்காமல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவது தகுதியற்றதாக்கப்பட்ட பதிவுகளானது தீர்ப்பிடும் செயல்முறைக்கு முன்னதாக அல்லது பின்னராக முடிக்கப்படும். இ.பு.ச நிறைவேற்றுக் குழுவின் முடிவுகள் அந்த விடயங்களில் இறுதியானதாகும்.

16. இ.பு.ச இந்த விதிகள் மற்றும் வழிமுறைகளை காலத்திற்கு காலம் மாறுதல் மாற்றம்/திருத்தம் செய்யலாம். இவ்வாறான நிகழ்வில் இ.பு.ச நிறைவேற்றுக் குழு விதிகள் மற்றும் வழிகாட்டல்களில் திருத்தங்கள் மேற்கொள்ளலாம் மேலும் அவ்வாறான திருத்தம் செய்யப்பட்ட நிபந்தனைகள் பொருத்தமான முறையில் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும்.

17. அவ்வாறான மாறுதல்கள்/மாற்றங்கள்/திருத்தங்கள் தெரியப்படுத்தப்படும் வரை இந்த விதிகளும் நிபந்தனைகளும் நடைமுறையில் இருக்கும்.

18. எல்லா பங்கேற்பாளர்களும் நடைமுறையில் மற்றும் எதிர்காலத்தில் பங்கெடுக்க எதிர்பார்த்து இருப்பவர்களும், விழிப்பாகவும் மற்றும் இந்த வழிகாட்டல்களுக்கு இணங்கவும், மேலும் ஆவலுடனான வருடாந்த விருதுகளுக்கு நேர்மையாகவும் பொறுப்புடனும் போட்டியிட எதிர்பார்க்கப்படுகின்றனர்.

Capture THIS!

இலங்கை புகைப்படச் சங்கத்தால்((இ.பு.ச) நடத்தப்படும்
மாதாந்த போட்டி

## வரைவிலக்கணம் - ஒற்றைவர்ணம்

ஒரு கறுப்பு மற்றும் வெள்ளை படைப்பு மிகவும் அடர் சாம்பல் நிறத்திலிருந்து (கறுப்பு) மிகவும் தெளிவான சாம்பல் (வெள்ளை) வரை பல்வேறு சாம்பலுள்ள வகைகளுடன் இருப்பது ஒரு ஒற்றைவர்ண வேலையாகும்.

முற்றிலும் ஒரு தனி நிறத்தில் இருக்கும் ஒரு கறுப்பு வெள்ளை படைப்பின் வண்ணச்சாயல் ஒரு ஒற்றைவர்ண படைப்பாக கறுப்பு வெள்ளை வகைக்குள் இருக்கும். அப்படியான ஒரு படைப்பு கறுப்பு வெள்ளையாக சர்வதேச கலை புகைப்பட சம்மேளனத்தின் (FIAP) ஆதரவின் கீழ் காட்சிப்படுத்தும் பட்டியலில் பிரதிசெய்யப்படும்.

இன்னொருபக்கம், ஒரு கறுப்பு வெள்ளை வேலையானது, பகுதியாக வண்ணச்சாயல் செய்து அல்லது ஒரு நிறத்தைச் சேர்ப்பதால் வரும் வர்ணநிறம் (பல்வகை வர்ணம்) வர்ண வகுப்பில் நிற்கும். அவ்வாறான வர்ண வேலை வேண்டப்படும் சர்வதேச கலை புகைப்பட சம்மேளனத்தின (FIAP)ஆதரவின் கீழ் காட்சிப்படுத்தும் பட்டியலில் பிரதிசெய்யப்படும்.

## வரைவிலக்கணம் - இயற்கை

இயற்கையின் சித்தரிக்கப்பட்ட பல அம்சங்கள் - தாவரங்கள் மற்றும் வனவிலங்கு, இயற்கையின் தனிசசிறப்புகளான நிலம், கடல் அல்லது இயற்கையின் நூதன காட்சிகள். இயற்கை புகைப்படமானது மானுடவியல் மற்றும் தொல்பொருள் தவிர்ந்த இயற்கை வரலாற்றினுடைய எல்லாக் கிளைகளையும் சித்தரிக்கும் புகைப்பட செயன்முறைக்கு பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துகிறது, இது போன்ற ஒரு நடப்பு வழக்கில் நன்கு தகவலறிந்த நபரால் விடய உபகரணங்களை அடையாளம் காணவும் இதன் நேர்மையான விளக்கக்காட்சியையும் சான்றுபகிர முடியும்.

## வரைவிலக்கணம் - கானுயிர்

இயற்கைப் புகைப்படத்துக்கான மேலே வழங்கப்பட்ட வரைவிலக்கணத்திற்கு மேலதிகமாக வரையறுப்பின், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தற்போது உயிர்ப்பிலுள்ள விலங்கியல் அல்லது தாவரவியல் உயிரினங்கள் சுதந்திரமாகவும் கட்டுப்பாடின்றியும் இயற்கையாக அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்விடங்களில் வாழுதல் ஆகும். இயற்கை நிலக்காட்சி, புவியியல் உருவாக்கங்கள், மிருகக்காட்சியினுடைய புகைப்படங்கள் அல்லது விளையாட்டுப் பண்ணை விலங்குகள் அல்லது ஏதாவது தற்போது கட்டுப்பாடுகள் நிபந்தனைகளுக்குள் எடுக்கப்பட்டுள்ள உயிர்ப்பிலுள்ள விலங்கியல் அல்லது தாவரவியல் இனங்கள் வனவிலங்கு பகுதிக்கு தகுதிபெறாது. வனவிலங்கு என்பது பாலூட்டிகள், பறவைகள், பூச்சிகளுக்குள் மட்டுப்படுத்தப்படாது. காடார்ந்த பகுதிகளில் எடுத்த கடல் விடயங்கள் மற்றும் தாவரவியல் விடயங்கள் (பூஞ்சை மற்றும் பாசி உள்ளடங்கலாக) பொருத்தமான வனவிலங்கு விடயங்களாக எடுத்துக்கொள்ளப்படும்.

கத்தரித்தல் தவிர்ந்த, புகைப்படத்திலுள்ள கூறுகளைச் சேர்த்தல், இடம்மாற்றுதல், பதிலாகமாற்றுதல் அல்லது அகற்றுதல் போன்ற தொழில்நுட்பங்கள் அனுமதிக்கப்படாது. இயற்கையினுடைய விபரங்களை அல்லது படத்தினுடைய உள்ளடக்கத்தை மாற்றாத அல்லது மூலக்காட்சியின் உள்ளடக்கத்தைத் திருத்தம் செய்யாத புகைப்படத்தினுடைய விளக்கக்காட்சியை மேம்படுத்தப் பயன்படும் HDR தொழில்நுட்பங்கள் , குவியம் குவித்தல் மற்றும் பகுதி மறைத்தல்/ தேய்த்து மெருகிடல் உள்ளடங்கலான படங்கள் அனுமதிக்கப்படும். தூசிப்புள்ளிகள், டிஜிட்டல் திரிபு மற்றும் படக்கீறல்கள் புகைப்படக் கருவியினால் சேர்க்கப்பட்ட கூறுகளை அகற்றும் தொழில்நுட்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இணைத்துக்கொள்ளப்பட்ட படங்கள் அனுமதிக்கப்படாது. அனைத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட சரிசெய்தல்களும் இயற்கையாகத் தோன்ற வேண்டும். வர்ணப்படங்கள் சாம்பல்-படிமுறை ஒற்றைப்படமாக மாற்றப்படலாம். நேரடியாக எடுத்த அல்லது நிறுவிய அகச்சிவப்புப் படங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

## வரைவிலக்கணம் - பயணம்

ஒரு பயணப் புகைப்படம் கட்டாயமாக காலத்தின் உணர்ச்சியை மற்றும் இடம், மேலும் ஒரு நிலத்தை, அதனுடைய தனித்துவமான அம்சங்கள் அல்லது கலாச்சாரத்தின் இயற்கை நிலையை வர்ணிக்கவேண்டும். புவியியல் வரம்பெல்லைகள் எதுவுமில்லை. அருகில் எடுக்கப்பட்ட மக்களுடைய அல்லது பொருட்களுடைய படங்கள் வேறுபடுத்தக் கூடிய சூழலைக் கட்டயம் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

புகைப்படத்திற்காக ஒழுங்குபடுத்தப்பட நிகழ்வுகள் அல்லது செயற்பாடுகளின் படங்கள், அல்லது பொருட்கள் தயார் செய்யப்பட்டு அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்டு எடுக்கப்பட்ட படங்கள் அனுமதிக்கப்படாது.

கத்தரித்தல் தவிர்ந்த, புகைப்படத்திலுள்ள கூறுகளைச் சேர்த்தல், இடம் மாற்றுதல், பதிலாகமாற்றுதல் அல்லது அகற்றுதல் போன்ற தொழில்நுட்பங்கள் அனுமதிக்கப்படாது.

ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரே சரிசெய்தலானது தூசிப்புள்ளிகள் அல்லது டிஜிட்டல் திரிபு அகற்றல், மூலக்காட்சியின் தோற்றத்தை மறுசீரமைத்தல் மற்றும் சாம்பல் படிமுறை ஒற்றைப்படமாக மாற்றுவதைப் பூர்த்திசெய்தல் ஆகும். மற்றைய நிறுவுதல்கள், அகச்சிவப்பு உள்ளடங்கலாக அனுமதிக்கப்படாது. அனைத்துப் படங்களும் இயற்கையாகக் காட்சியளிக்க வேண்டும்.

Capture THIS!

இலங்கை புகைப்படச் சங்கத்தால்((இ.பு.ச) நடத்தப்படும்
மாதாந்த போட்டி

## சமர்ப்பிக்க வேண்டப்படுவன

1. டிஜிட்டல் வடிவத்தில் இருந்தால் மட்டுமே பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும் மற்றும் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரி ஊடாக மின்னஞ்சல் செய்ய முடியும்.

2. பகுதிக்கு இரண்டு படங்கள் என்ற வரையறையுடன் எந்தவொரு உறுப்பினரும் மொத்தமாக பத்துப் படங்களை அதிகபட்சமாக சமர்ப்பிக்கலாம். (அதாவது பகுதிக்கு தலா இரண்டு படங்கள். கருப்பொருள் ஒப்படை, திறந்த வர்ணம், திறந்த ஒற்றை வர்ணம், கானுயிர் மற்றும் இயற்கை, பயணம்)

3. படங்கள் ஆகக்கூடியது 1920 படப்புள்ளிகள், படத்தினுடைய நீளப் பக்கம் (உயரம் அல்லது அகலம்) மற்றும jpeg. வடிவமாக சேமிக்க வேண்டும் மற்றும் ஒரு படம் தலா 2MB பிரித்திறனுக்கு அதிகரிக்காமல் இருக்கவேண்டும்.

4. ஒவ்வொரு படமும் சமர்ப்பிக்கும் போது அதனுடைய தலைப்பு அல்லது குறிப்பிட்ட பெயர் மற்றும் அடையாளத்துடன் பின்வருமாறு பகுதி/ வகையின் சரியான அடையாளத்துடன் இருக்க வேண்டும்.:

| | |
|---|---|
| அ. கருப்பொருள் ஒப்படை | AS_(Image Number_Title) |
| ஆ. திறந்த வர்ணம் | OC_(Image Number_Title) |
| இ. திறந்த ஒற்றை வர்ணம் | OM_(Image Number_Title) |
| ஈ கானுயிர் மற்றும் இயற்கை | WN_(Image Number_Title) |
| உ பயணம் | TR_(Image Number_Title) |

(Example for an assignment submission AS_01_Serene)

5. அனைத்து சமர்ப்பிப்புகளும் capturethispssl@gmail.com என்ற முகவரிக்கு குறிக்கப்பட்ட திகதி மற்றும் மாதத்தில் அனுப்பிவைக்க வேண்டும். துண்டிப்பு நேரம் (உதாரணமாக ஜீன் 30, ஞாயிற்றுக்கிழமை 12 நடு இரவு) நுழைபவருடைய கணினியிலிருந்து அனுப்பிய நேரம் சமர்ப்பித்த நேரமாகப் பதிவு செய்யப்படும்.

6. மின்னஞ்சலின் விடயக் கோட்டில் பங்கு பெறுபவரின் பெயர் சமர்ப்பிக்கும் மாதம் மொத்த படங்களின் எண்ணிக்கை எனுமாறு பதிவிடவும். (eg. Sampath Perera+April+8 images)

7. பங்குபெறுபவர் ஒருவரிடமிருந்து ஒரே ஒரு மின்னஞ்சல் மாத்திரம் ஒரு மாதத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். ஒரே மாதத்தில் பல மின்னஞ்சல்கள் பெற்றுக்கொள்ளுமிடத்து முதலாவது மின்னஞ்சல் மாத்திரமே அந்த மாதத்திற்காக இ.பு.சங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

8. இங்கு ஏற்படுத்தப்பட்ட சமர்ப்பிப்பு வேண்டுதலுக்கு இணங்காத பதிவுகள் தானாகவே தகுதியிழக்கும்.

Capture THIS!

இலங்கை புகைப்படச் சங்கத்தால்((இ.பு.ச) நடத்தப்படும்
மாதாந்த போட்டி

# செய்ய வேண்டியவை

1. தலைப்பு/ கருப்பொருளைப் பரிசோதனை செய்தல் மற்றும் இசைவு பெறுதல். (மேலும் விபரங்களுடன் இணைவாதல்)
2. ஒரு பகுதிக்கு இரண்டு படங்கள் மட்டும் சமர்ப்பித்தல்
3. உங்கள் கோப்பிற்கு சரியாகப் பெயரிடுங்கள், அளவை சுருக்கி மின்னஞ்சல் செய்க. கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.
4. தவணைத் திகதியில் அல்லது அதற்கு முன்னராகச் சமர்ப்பிக்கவும்.
5. ஒரு மாதத்திற்கு ஒரு மின்னஞ்சல் மாத்திரம்.
6. விதிகள் மற்றும் வழிகாட்டல்களை விபரமாக சோதித்து தெரிந்து கொள்க

# செய்யக் கூடாதவை

1. ஏதாவது மாதாந்த போட்டியில் ஏதாவது வகையின் கீழ் முன்னர் தெரிவு செய்யப்பட்ட ( மற்றும் புள்ளிகள் வென்ற) படத்தை மீளவும் சமர்ப்பித்தல்.
2. காட்சிப்படுத்தப்பட்ட/ வருடாந்த கண்காட்சிகளில் அல்லது ஏதாவது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு கண்காட்சிகளில் வெற்றி பெற்ற படங்களைச் சமர்ப்பித்தல்.
3. டிஜிட்டலில் உருவாக்கப்பட்ட படங்களை சமர்ப்பித்தல்
4. படத்தின் முகப்பில் ஆக்கியோனின் அடையாளம் அல்லது பதிப்புரிமைத் தகவல்கள் மற்றும் ஏதாவது தலைப்பிடல்.
5. பதிப்புரிமை உங்களிடமில்லாத படங்களை சமர்ப்பித்தல் அல்லது படங்களின் பகுதிகளைப் பயன்படுத்துதல்